சுருக்கம்

தொடக்கக் கல்வி – கருணை அடிப்படை நியமனம் – திருவண்ணாமலை மாவட்டம் – புன்னைப்புதுப்பாளையம், அரசு உயர்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து பணிக்காலத்தில் காலமான திரு.கே.தேவதாஸ் என்பாரின் மகள் செல்வி தே.மீரா என்பாருக்கு 15.04.2010 முதல் தட்டச்சர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்பட்டது – திருத்தம் வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வி (தொக3(1)துறை

அரசாணை (3டி) எண் .165

நாள் 19.09.2016
திருவள்ளுவர் ஆண்டு–2047
புரட்டாசி–3
படிக்கப்பட்டது.

1. அரசாணை (3டி) எண்.100, பள்ளிக் கல்வி, நாள் 16.12.2014.
2. தொடக்கக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.13723/ அ2/2012, நாள் 29.01.2016.

–*–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், திருவண்ணாமலை மாவட்டம், செய்யார், உதவித் தொடக்கக் கல்வி அலுவலகத்தில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு தட்டச்சராகப் பணிபுரிந்து வரும் செல்வி.தே.மீரா என்பாருக்கு தட்டச்சர் பதவியில் பணி வரன்முறை செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. தற்போது மேற்படி அரசாணையில் இறந்த அரசு ஊழியர் பணிபுரிந்து வந்த அலுவலகத்தின் பெயர் தவறுதலாக திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு உதவித் தொடக்கக் கல்வி அலுவலகம் என குறிப்பிடப்பட்டுள்ளதால், அதற்கு திருவண்ணாமலை மாவட்டம், புன்னைப் புதுப்பாளையம் அரசு உயர்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணியில் இருக்கும்போது காலமான, என திருத்தம் செய்து ஆணை வழங்குமாறு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் தொடக்கக் கல்வி இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

3. மேற்கண்ட நிலையில், தொடக்கக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, மேலேமுதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைக்கு பின்வருமாறு திருத்தம் வெளியிடப்படுகிறது.

திருத்தம்

"செல்வி தே.மீரா, தட்டச்சர் என்பாரின் தந்தையார் பணிபுரிந்துவந்த அலுவலகம், திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு உதவித் தொடக்கக் கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியில் இருக்கும் போதே காலமான கே.தேவதாஸ் என்பாரின் மகள் என்பதற்கு பதிலாக,

திருவண்ணாமலை மாவட்டம், புன்னைப் புதுப்பாளையம் அரசு உயர்நி...
பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணியில் இருக்கும்போது கால...
திரு.கே.தேவதாஸ் என்பாரின் மகள் என திருத்தி வாசிக்கவும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.சபிதா
அரசு முதன்மைச் செய...

பெறுநர்
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை—6.
தனியர் (தொடக்கக் கல்வி இயக்குநர் வழியாக).
நகல்
இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலு...

சுருக்கம்

தொடக்கக் கல்வி – கருணை அடிப்படை பணி நியமனம்–தமிழ்நாடு அமைச்சுப் பணி –பள்ளிக் கல்வித் துறை– செல்வி.தே.மீரா, த /பெ.(மறைந்த) திரு.கே.தேவதாஸ் என்பார் 15.4.2010 முற்பகல் முதல் தட்டச்சர் பதவியில் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வித் (தொ.க.3(1)துறை

அரசாணை ( 3டி) எண்.100

நாள் 16.12.2014
திருவள்ளுவர் ஆண்டு–2045
ஸ்ரீஜய வருடம், மார்கழி–1
படிக்கப்பட்டவை:–

1) தொடக்கக் கல்வி இயக்குநரின் கடித ந.க. எண். 013723/அ2/2012, நாள் 8.12.2012 மற்றும் 23.10.2013

2) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் கடித எண்.2245/சிடி–சி2/2014, நாள் 23.10.2014

******

<u>ஆணை:–</u>

பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரருக்குக் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டப்படி, செல்வி.தே.மீரா என்பவர் தட்டச்சராக 15.4.2010 முற்பகல் முதல் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பள்ளிக் கல்வித் துறையில் தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்டார். அன்னாரின் பணியினை பணிவரன்முறை செய்து ஆணையிடும்படி, தொடக்கக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். தற்காலிகமாகப் பணி அமர்த்தப்பட்டவரின் தந்தை திரு.கே.தேவதாஸ் என்பவர் 24.8.2007 அன்று காலமானார் என்றும், அவர் தகுதிகாண் பருவம் முடித்தவர் என்றும், அவரது குடும்பம் வறிய சூழ்நிலையில் இருந்தது என்றும், அவரது மகள் செல்வி.தே.மீரா என்பவர் கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு கேட்டு விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த நாள் 24.5.1978 என்றும், அவர் இடைநிலைக் கல்விப் பள்ளியிறுதி வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், இவருக்குப் பணிவாய்ப்பு வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் மறுப்பு ஏதும் தெரிவிக்கவில்லை என்றும், தொடக்கக்கல்வி இயக்குநர் தெரிவித்து அன்னாரின் பணியினை வரன்முறை செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. தொடக்கக் கல்வி இயக்குநரின் பரிந்துரையை அரசு நன்கு ஆய்வு செய்தது. கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டப்படி, தட்டச்சராகப் பணி அமர்த்தப்பட்ட செல்வி.தே.மீரா என்பவரைத் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பள்ளிக் கல்வித் துறையில் தட்டச்சர் பதவியில் 15.4.2010 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்திட 1954–ம் ஆண்டைய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகளில், ஒழுங்குமுறை16(பி)ன்

பிற்பகுதியின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவு கோரப்பட்டது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையமும் இதற்கு இசைவு அளித்துள்ளது.

3. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் இசைவின் அடிப்படையில் திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு உதவித் தொடக்கக் கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியில் இருக்கும்போது காலமான திரு.கே.தேவதாஸ் என்பவரின் மகள் செல்வி.தே.மீரா என்பவரை கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பள்ளிக் கல்வித் துறையில் தட்டச்சர் பதவியில் 15.4.2010 முற்பகல் முதல் அவரது பணியினை வரன்முறை செய்ய அவர் தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் தனியரின் பணியை வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்னாளிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் அவர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை இருப்பின் அவைகளை விதிகளின்படி பெறத் தகுதி உடையவராகிறார்.

4. இந்த அரசாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் இசைவினை அதன் அ.சா. எண். 28436/ட்டி1/2014–1, நாள். 12.12.2014 –ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.சபிதா
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>

தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6
தனியர் (தொடக்கக் கல்வி இயக்குநர் வழியாக)
செயலாளர்,
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்,சென்னை.3

<u>நகல்</u>

பணியாளர் (ம) நிருவாகச் சீர்திருத்தத் துறை,சென்னை–9
தொழிலாளர் (ம)வேலை வாய்ப்புத்துறை, சென்னை–9
பள்ளிக்கல்வி (அநமு பிரிவு)துறை, சென்னை–9
இருப்புக் கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்